**அனுப்புநர்**
திருமதி.த.விஜயலட்சுமி,எம்.எஸ்.சி.,எம்.எட்.,
முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
முதன்மைக் கல்வி அலுவலகம்,
பெரம்பலூர்– 621212.

**பெறுநர்**
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி
அலுவலர்கள்.

**ந.க.எண்.409 /அ4 / 2023** **நாள். 12.01.2024**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள்:** பள்ளிக்கல்வித்துறை – உடற்கல்வி – பெரம்பலூர் மாவட்டம் – 2023-24 ஆம் கல்வியாண்டு – மாநில அளவிலான பாரதியார் தின / குடியரசு தின ஜுடோ, வாள்சண்டை, சாலையோர மிதிவண்டி ஆகிய புதிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுதல் – போட்டி நடைபெறும் மையம், தங்குமிடம் விவரம் அனுப்புதல் – தொடர்பாக.

**பார்வை** சென்னை–06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்,34753/M/S4/2023 நாள். 22.12.2023

.........

பார்வையில் காணும் கடிதத்தின் படி, 2023–2024 ஆம் கல்வியாண்டிற்கான மாநில அளவிலான பாரதியார் தின / குடியரசு தின புதிய விளையாட்டு போட்டிகளான ஜுடோ, வாள்சண்டை, சாலையோர மிதிவண்டி ஆகிய போட்டிகள் பெரம்பலூர் மாவட்டத்தில் 25.01.2024 முதல் 28.01.2024 வரை இணைப்பில் காணும் மையங்களில் நடைபெறவுள்ளது. மாணவியர்களுக்கான போட்டிகள் 25.01.2024 மற்றும் 26.01.2024 ஆகிய நாட்களிலும், மாணவர்களுக்கான போட்டிகள் 27.01.2024 மற்றும் 28.01.2024 ஆகிய நாட்களிலும் மற்றும் சாலையோர மிதிவண்டி போட்டி மாணவ/ மாணவியர்களுக்கு 27.01.2024 அன்று காலை 06.00 மணிக்கு நடைபெறவுள்ளது என்பது கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**இணைப்பு –** போட்டிகள் நடைபெறுமிடம் மற்றும் அணிமேலாளர்கள் சார்ந்த அறிவுரைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
பெரம்பலூர்

**நகல்**

1. பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்) , அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
3. முதன்மை உடற்கல்வி ஆய்வாளர்கள் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது
4. பெரம்பலூர் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்.( உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு).
5. அனைத்து மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள்.

**மாநில அளவிலான புதிய விளையாட்டுப் போட்டிகள் –2023–2024, பெரம்பலூர்**

**அணி மேலாளர்கள் கவனத்திற்கு**

1. தங்கள் மாவட்டத்திலிருந்து பங்குபெறும் மாணவியர்களின் வருகையை 24.01.2024 அன்று மாலை 03.00 மணிக்கும் மற்றும் மாணவர்களின் வருகையை 26.01.2024 அன்று மாலை 03.00 மணிக்கும் கண்டிப்பாக பதிவு செய்திட அணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
2. ஜுடோ போட்டியில் பங்குபெறும் மாணவியர்கள் 24.01.2024 அன்று மாலை 03.00 மணி அளவில் Trial Weight –ம் 05.00 மணி முதல் 07.00 மணி வரை Real Weight–ம் எடுக்கப்படும். (24.01.2024 அன்று மாணவிகளுக்கு, அணி மேலாளர்களுக்கு மட்டும் இரவு உணவு வழங்கப்படும்.)
3. அதே போல் மாணவர்களுக்கு 26.01.2024 அன்று மாலை 03.00 மணி அளவில் Trial Weight –ம் 05.00 மணி முதல் 07.00 மணி வரை Real Weight–ம் எடுக்கப்படும்.( 26.01.2024 அன்று மாணவர்களுக்கு, அணி மேலாளர்களுக்கு மட்டும் இரவு உணவு வழங்கப்படும்.)
4. 27.01.2024 அன்று காலை 06.00 மணி அளவில் நடைபெறும் சாலையோர மிதிவண்டி போட்டிக்கு (மாணவ/மாணவியர்கள்) 26.01.2024 அன்று மாலை 05.00 மணிக்குள் வருகையை பதிவு செய்ய வேண்டும். (Participants may use any Type of Cycle)
5. சாலையோர மிதிவண்டியில் பங்குபெறும் அனைத்து மாணவ , மாணவியர்களின் பாதுகாப்பு அவசியம் கருதி தலைக்கவசம் அணிந்து போட்டியில் பங்கு பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
6. மாவட்ட உடற்கல்வி ஆய்வாளரால் அனுமதி பெற்று வரும் உடற்கல்வி இயக்குநர் / ஆசிரியர்கள் மட்டுமே அணி மேலாளராக பணியாற்ற அனுமதிக்கப்படுவர். (அனுமதி கடிதம் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும்.) பயிற்சியாளர்கள் யாரேனும் போட்டியில் இடையூறு செய்தால் போட்டியாளர் கண்டிப்பாக உடனே போட்டியிலிருந்து நீக்கம் செய்யப்படுவர்.
7. வீரர்கள், வீராங்கனைகள் தங்குவதற்கு தங்குமிடங்களில் தனித்தனியாக குழு ஒன்றிற்கு ரூபாய் 500/– வீதம் வைப்புத் தொகை செலுத்த வேண்டும். அத்தொகை நிறைவு நாளன்று திரும்ப வழங்கப்படும்.
8. வீரர், வீராங்கனைகள் தாங்கள் தங்கும் இடத்தினை தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் எவ்வித சேதமும் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். சேதம் ஏற்படின் அணி மேலாளர்கள் முழு பொறுப்பேற்க வேண்டும். மேலும் வைப்புத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.
9. வீரர்கள், வீராங்கனைகள் தங்குமிடத்தில் அணி மேலாளர்கள் கண்டிப்பாக தங்க வேண்டும்.அணி மேலாளர்களுக்கு மட்டுமே தங்கவும், உணவு உண்ணவும் அனுமதிக்கப்படுவர், மற்றவர்கள் வெளியில் தங்கிக் கொள்ள வேண்டும்
10. மாணவியர்களுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் 24.01.2024 அன்று மாலை 06.00 மணிக்கும் மாணவர்களுக்கான அணி மேலாளர்கள் கூட்டம் 26.01.2024 அன்று மாலை 06.00 மணிக்கும் நடைபெறும்.
11. போட்டியில் பங்கு பெறும் வீரர், வீராங்கனைகள் மற்றும் நடுவர்கள் தவிர மற்றவர்கள் மைதானத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12. போட்டி நடைபெறும் காலம் குளிர்காலமாக இருப்பதால் போர்வை உட்பட தங்குவதற்குரிய உடைமைகளையும் பங்கு பெறுதற்கரிய உடைமைகளையும் கொண்டு வர அறிவுரை வழங்கி எடுத்து வருதல் வேண்டும்.மேலும் ( Lock and Key) கொண்டு வருதல் வேண்டும்.
13. போட்டிகளில் பங்கு பெறுவோர் உரிய விளையாட்டு சீருடையுடன் இருப்பின் மட்டுமே போட்டியாளர்கள் பங்கு பெற அனுமதிக்கப்படுவார்கள்.
14. போட்டிகளுக்கான நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
15. மாணவியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் பெண் ஆசிரியைகள் மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.
16. மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் ஆண் ஆசிரியர்கள் மட்டுமே கண்டிப்பாக உடன் தங்க அனுமதிக்கப்படுவார்கள்.
17. எடைப்பிரிவு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தாங்கள் எடைபோடும் போதும் மற்றும் போட்டி நடைபெறும் போதும் ஒரு Individual Photo Identity Form கையில் வைத்திருக்க வேண்டும்.
18. ஜுடோ, வாள்சண்டை மாணவியர்கள் போட்டி முடிந்தவுடன் 26,01,2024 அன்று மாலை 03.00 மணிக்குள் தங்குமிடத்தில் இருந்து புறப்பட வேண்டும்.
19. போட்டிகள் நடைபெறும் நாட்களில் விளையாட்டு மைதானம் மற்றும் தங்கும் இடங்களில் எந்தவொரு இடையூறும் ஏற்படுத்தாமல் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்காண் அனைத்து தகவல்களையும் மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர்கள் அந்தந்த மாவட்ட பொறுப்பாளர்களுக்கும் விளையாட்டில் பங்கேற்கும் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கும் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
பெரம்பலூர்.